# பள்ளிக் கல்வித்துறை, தூத்துக்குடி மாவட்டம்

## தமிழ் இலக்கியத் திறனறித் தேர்வு – 2024

## மாதிரித் தேர்வு – 2

வகுப்பு : 11 மதிப்பெண்கள் : 100 காலம் : 2 மணி நேரம்

1. பொருத்தி விடை தேர்க.

(i). கபிலர் – 1) பெருஞ்சாத்தன்
(ii). நக்கீரர் – 2) மலையமான் திருமுடிக்காரி
(iii). பரணர் – 3) குமணன்
(iv). பெருந்தலைச் சாத்தனார் – 4) பேகன்

அ. (i)–3 (ii)–4 (iii)–1 (iv)–2
ஆ. (i)–1 (ii)–2 (iii)–3 (iv)–4
இ. (i)–2 (ii)–1 (iii)–4 (iv)–3
ஈ. (i)–2 (ii)–1 (iii)–3 (iv)–4

2. "ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு" – இப்பாடலடிகளில் பயின்று வந்துள்ள பொருள்கோள் வகை ..........
அ. நிரல்நிறைப் பொருள்கோள் ஆ. கொண்டுகூட்டுப் பொருள்கோள்
இ. ஆற்றுநீர்ப் பொருள்கோள் ஈ. தாப்பிசைப் பொருள்கோள்

3. 'உனக்குப் படிக்கத் தெரியாது' என்னும் கூற்றினால் உந்தப்பட்டு, குப்பைக் கொட்டும் இடத்தில் ஒரு பள்ளியை உருவாக்கியவர் .................
அ. ஹெலன் கெல்லர் ஆ. அன்னை தெரசா
இ. மேரி மெக்லியோட் பெத்யூன் ஈ. மரியா மாண்டசோரி

4. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளின் வேறு பெயர் ..............
அ. வசன கவிதை ஆ. உரைநடைப் பாட்டு
இ. உரை மடைப்பாட்டு ஈ. உரைப்பாட்டு மடை

5. 'ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருந்துவதும் கல்வியென்றே போற்று' – இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் ...........
அ. நீதி வெண்பா ஆ. பரிபாடல் இ. நற்றிணை ஈ. பெருமாள் திருமொழி

6. கூற்று : 1 – கருந்துளையினுள் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளியே வரமுடியாது.
கூற்று : 2 – கருந்துளை என்பது உண்மையில் கருப்பாக இருக்கும்.
அ. கூற்று–1 சரி, கூற்று–2 தவறு ஆ. கூற்று–1 தவறு, கூற்று–2 சரி
இ. கூற்று–1, 2 இரண்டும் சரி ஈ. கூற்று–1, 2 இரண்டும் தவறு

7. "நடுங்கு <u>சுவல்</u> அசைத்த கையள்" – அடிக்கோடிட்ட சொல்லுக்குரிய பொருள் ..........
அ. கன்னம் ஆ. கைகள் இ. பற்கள் ஈ. தோள்

8. இரவீந்திரநாத் தாகூர் எழுதிய கவிதைத் தொகுப்பு நூலான கீதாஞ்சலி எம்மொழியில் மொழிபெயர்த்தமைக்கு அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது?
அ. வங்க மொழி ஆ. ஜப்பானிய மொழி
இ. ஆங்கில மொழி ஈ. பிரெஞ்சு மொழி

9. 'Telemetry' எனும் சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல் .............
அ. தொலைவரி ஆ. தொலை அளவியல் இ. தொலைநகல் ஈ. தொலைநோக்கி

10. பிரெஞ்சு மொழியில் வந்த காந்தியின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழாக்கம் செய்தவர் ............
அ. கண. முத்தையா ஆ. குப்புசாமி இ. அசோகமித்ரன் ஈ. ஜெயகாந்தன்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11. தவறான இணைகளைத் தேர்க.

1. பம்பை – தேவராட்டம்
2. டோலக் – ஒயிலாட்டம்
3. உறுமி – பொய்க்கால் குதிரையாட்டம்
4. பறை – தப்பாட்டம்

அ. 1, 2 ஆ. 1, 3 இ. 1, 4 ஈ. 2, 4

12. வெட்சிப் பூவின் மறுபெயர் .............

அ. மல்லிகைப்பூ ஆ. இட்லிப்பூ இ. சங்குப்பூ ஈ. முல்லைப்பூ

13. 'குற்றங்களை அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும்' – எனக் கூறியவர் ................

அ. ஊன்பொதிப் பசுங்குடையார் ஆ. மாங்குடி மருதனார்
இ. ஆவூர் மூலங்கிழார் ஈ. முடமோசியார்

14. 'உண்டோம்' என்ற பகுபதத்தில் 'ஓம்' என்னும் விகுதி .............

அ. தன்மை ஒருமை வினைமுற்று விகுதி
ஆ. தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி
இ. முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி
ஈ. முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி

15." முப்பழமொடு பால் அன்னம்
முகம் கடுத்து இடுவாராயின்
கப்பிய பசியி னோடு
கடும் பசி ஆகும் தானே" – என்னும் பாடலடிகள் இடம்பெற்ற நூல் .............

அ. விவேக சிந்தாமணி ஆ. அபிதான சிந்தாமணி
இ. வளையாபதி ஈ. சீவகசிந்தாமணி

16. உழிஞை, தும்பை – ஆகிய புறத்திணைகளின் போர்ச் செயல்கள் முறையே ...........

அ. கோட்டையைக் காத்தல், மாற்றரசனோடு போரிடல்
ஆ. மாற்றரசனோடு போரிடல், நிரை மீட்டல்
இ. நிரை மீட்டல், மாற்றரசனோடு போரிடல்
ஈ. கோட்டையைச் சுற்றி வளைத்தல், வலிமையே பெரிது என்பதை நிலைநாட்டப் போரிடல்

17. அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து, அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளே பொதிந்திருக்கும் மலர்களுள் பொருந்தாத ஒன்றினைத் தேர்க.

அ. கொழிஞ்சி ஆ. நெருஞ்சி இ. அத்தி ஈ. ஆலம்

18. கவிஞர் உமாமகேஸ்வரி படைப்புகளில் அல்லாத ஒன்று .............

அ. நட்சத்திரங்களின் நடுவே ஆ. கற்பாவை
இ. வெறும்பொழுது ஈ. மீட்சி விண்ணப்பம்

19. பொருத்தி விடை தேர்க.

(i). மொழி ஞாயிறு – 1) க. அப்பாத்துரையார்
(ii). பன்மொழிப் புலவர் – 2) ந. முத்துசாமி
(iii). சதாவதானி – 3) தேவநேயப் பாவாணர்
(iv). கலை ஞாயிறு – 4) செய்கு தம்பிப் பாவலர்

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | (i)–3 | (ii)–1 | (iii)–4 | (iv)–2 |
| ஆ. | (i)–4 | (ii)–2 | (iii)–3 | (iv)–1 |
| இ. | (i)–2 | (ii)–1 | (iii)–3 | (iv)–4 |
| ஈ. | (i)–3 | (ii)–4 | (iii)–1 | (iv)–2 |


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

20. 'கானடை' என்னும் சொல் பிரிபடும் முறைகளில் சரியானவற்றைத் தேர்க.

(1) கா + னடை (2) கான் + அடை (3) கான் + நடை (4) கால் + நடை

அ. (2), (3) மட்டும் ஆ. (1), (2), (3) மட்டும்

இ. (2), (3), (4) மட்டும் ஈ. அனைத்தும் சரி

21. துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றைப் பாடுவதாக அமைந்த நூல் ...........

அ. மலைபடுகடாம் ஆ. முல்லைப்பாட்டு இ. காசிக் காண்டம் ஈ. சீவகசிந்தாமணி

22. கலிவெண்பாவின் அடிவரையறை . ............

அ. பதின்மூன்று அடுக்கு மேல் ஆ. பத்து அடிகள்

இ. பன்னிரண்டு அடிகள் ஈ. நான்கு அடிகள்

23. "தோழமை என்றவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ"

– என்ற தொடரோடு தொடர்புடைய இருவர் .............

அ. வீடணன், அனுமன் ஆ. அனுமன், சுக்ரீவன்

இ. சுக்ரீவன், இராமன் ஈ. இராமன், குகன்

24. "போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி

'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட"

– இப்படால் அடிகளில் இடம்பெற்றுள்ள அணி ..........

அ. நிரல் நிறை அணி ஆ. தன்மையணி

இ. தற்குறிப்பேற்ற அணி ஈ. தீவக அணி

25. "மெய்ப்பொருள் காண்ப தறிவு"

– இக்குறளடிக்குப் பொருத்தமான வாய்ப்பாடு .............

அ. புளிமா தேமா மலர் ஆ. தேமா தேமா பிறப்பு

இ. கூவிளம் தேமா பிறப்பு ஈ. கருவிளம் தேமா பிறப்பு

26. சுவிட்சர்லாந்து அரசின் காந்தி அமைதி விருது மற்றும் சுவீடன் அரசின் வாழ்வுரிமை விருது பெற்று பெண்குலத்திற்கு பெருமை சேர்த்தவர் .............

அ. இராஜம் கிருஷ்ணன் ஆ. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்

இ. எம்.எஸ். சுப்புலட்சுமி ஈ. பாலசரஸ்வதி

27. கீழ்க்காண்பவற்றுள் தவறான கூற்றைத் தேர்க.

அ. காலம் கரந்த பெயரெச்சமே வினைத்தொகையாகும்.

ஆ. இரு சொற்களுக்கிடையே மட்டும் 'உம்' எனும் இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத் தொகையாகும்.

இ. உவமைக்கும் உவமேயத்திற்கும் இடையில் உவம உருபு மறைந்து வருவது உவமைத் தொகையாகும்.

ஈ. தொகைநிலைத் தொடர்களில் உருபுகளும் அவை அல்லாத வேறு சொற்களும் மறைந்து நின்று பொருள் தருவது அன்மொழித் தொகை எனப்படும்.

28. உய்யவந்த பெருமாளை அன்னையாக உருவகித்துப் பாடியவர் ...........

அ. பெரியாழ்வார் ஆ. நம்மாழ்வார் இ. குலசேகராழ்வார் ஈ. பொய்கையாழ்வார்

29. 'பிழையா நன்மொழி' என்று வாய்மையைக் குறிப்பிடும் நூல் .............

அ. நற்றிணை ஆ. புறநானூறு இ. சிலப்பதிகாரம் ஈ. மணிமேகலை

30. மா. இராமலிங்கம் அவர்களின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் ..................

அ. இனிக்கும் நினைவுகள் ஆ. எங்கெங்கு காணினும்

இ. யாதுமாகி நின்றாய் ஈ. புதிய உரைநடை

31. விதைத்துவிட்டு வந்த விதைநெல்லை அரித்து வந்து விருந்தினருக்குச் சமைத்து விருந்தளித்திட்டவர் ................

அ. ஏனாதிநாத நாயனார் ஆ. இளையான்குடி மாறநாயனார்

இ. இயற்பகை நாயனார் ஈ. மெய்ப்பொருள் நாயனார்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

32. பொருத்தி விடை தேர்க.

(i). அவை – 1) படர்க்கை வினை
(ii). படித்தனர் – 2) தன்மை வினை
(iii). நடந்தாய் – 3) படர்க்கைப் பெயர்
(iv). வந்தோம் – 4) முன்னிலை வினை

அ. (i)–3 (ii)–1 (iii)–2 (iv)–4
ஆ. (i)–3 (ii)–1 (iii)–4 (iv)–2
இ. (i)–4 (ii)–3 (iii)–2 (iv)–1
ஈ. (i)–1 (ii)–4 (iii)–3 (iv)–2

33. 'கண் வலிக்கும்' என்பது ............

அ. இனமொழி விடை ஆ. உற்றது உரைத்தல் விடை
இ. உறுவது கூறல் விடை ஈ. நேர் விடை

34. தொடர்களையும் அதற்குரிய நூல்களையும் தேர்க.

| **தொடர்கள்** | **நூல்கள்** |
|---|---|
| (i). கூர்வேல் குவைஇய மொய்ம்பின் தேர்வண் பாரிதண் பறம்பு நாடே! | – 1) ஐங்குறுநூறு |
| (ii). ஓங்கு இரும் பரப்பின் வங்க ஈட்டத்து தொண்டியோர் | – 2) அகநானூறு |
| (iii). கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை | – 3) புறநானூறு |
| (iv). கடும்பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை திரு மா வியல் நகர்க் கருவூர் முன்துறை | – 4) சிலப்பதிகாரம் |

அ. (i)–3 (ii)–4 (iii)–1 (iv)–2
ஆ. (i)–3 (ii)–1 (iii)–2 (iv)–4
இ. (i)–4 (ii)–2 (iii)–3 (iv)–1
ஈ. (i)–2 (ii)–1 (iii)–4 (iv)–3

35. மயங்கிய – இப்பகுபதத்தில் இடம்பெற்றுள்ள இடைநிலை ...........

அ. க் ஆ. இ(ன்) இ. ய் ஈ. அ

36. தெருக்கூத்து கலையில் 'அருச்சுனன் தபசு' நிகழ்த்தப்படுவதற்கான காரணம் ...........

அ. வெற்றி வேண்டி ஆ. இறையருள் வேண்டி
இ. மழை வேண்டி ஈ. பாதுகாப்பு வேண்டி

37. மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்ற தன் வீரர்களுடன் கோட்டையைச் சுற்றி வளைத்தல் ............

அ. தும்பைத் திணை ஆ. உழிஞைத் திணை
இ. நொச்சித் திணை ஈ. காஞ்சித் திணை

38. தகவல்களைக் கொடுத்தால் அழகான கட்டுரையைச் சில நொடிகளில் உருவாக்கித் தரும் மென்பொருள் ...........

அ. இலா ஆ. பெப்பர் இ. வேர்டுஸ்மித் ஈ. வாட்சன்

39. 'கத்துங் குயிலோசை' என்னும் தொடரில் அமைந்துள்ள வழுவமைதி ..............

அ. ஒலி வழுவமைதி ஆ. இசை வழுவமைதி
இ. கால வழுவமைதி ஈ. மரபு வழுவமைதி

40. 'கடுங்காற்று, மணலைக் கொண்டுவந்து சேர்க்கிறது' என்று காற்றின் வேகத்தைக் குறிப்பிடுபவர் ...............

அ. குடபுலவியனார் ஆ. ஐயூர் முடவனார்
இ. வெண்ணிக் குயத்தியார் ஈ. மதுரை இளநாகனார்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

41. பொருத்தி விடை தேர்க.

(i). நரலும் – 1) தங்கி
(ii). வயிரியம் – 2) இளைப்பாறி
(iii). அசைஇ – 3) ஒலிக்கும்
(iv). அல்கி – 4) கூத்தர்

அ. (i)–3 (ii)–4 (iii)–2 (iv)–1
ஆ. (i)–2 (ii)–3 (iii)–4 (iv)–1
இ. (i)–4 (ii)–3 (iii)–2 (iv)–1
ஈ. (i)–2 (ii)–4 (iii)–1 (iv)–3

42. "மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்
அற்று அற்று ஒழுகும் அஃது யாற்றுப் புனலே"
– என ஆற்றுநீர்ப் பொருள்கோளுக்கு இலக்கணம் கூறும் நூல் .............

அ. தொல்காப்பியம் ஆ. நன்னூல்
இ. யாப்பெருங்கலக்காரிகை ஈ. தண்டியலங்காரம்

43. 'செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்' – இக்குறள் இடம்பெற்றுள்ள அதிகாரம் .............

அ. கண்ணோட்டம் ஆ. அமைச்சு
இ. பொருள் செயல் வகை ஈ. பகை மாட்சி

44. பொருந்தாத ஒன்றனைத் தேர்க.

அ. கேட்க வேண்டிய பாடல் ஆ. சொல்லத்தக்க செய்தி
இ. ஆடிப்பாடி மகிழ்ந்தனர் ஈ. எழுந்து நின்ற மாணவன்

45. 'இமயத்துக்கு அப்பால்' என்னும் நூலிற்காக எழுத்தாளர் ஜெயகாந்தன் பெற்ற விருது ..........

அ. குடியரசுத் தலைவர் விருது ஆ. ஞானபீட விருது
இ. தாமரைத் திரு விருது ஈ. சோவியத் நாட்டு விருது

46. பின்வரும் நூல்களின் அடிகள்/பாடல்களின் எண்ணிக்கையை தமிழ் எண்களுடன் பொருத்தி விடை தேர்க.

(i). முல்லைப்பாட்டு – 1) க0ரு
(ii). மலைபடுகடாம் – 2) ஙுசாகரு
(iii). பெருமாள் திருமொழி – 3) க0ஙு
(iv). தேம்பாவணி – 4) ருஅஙு

அ. (i)–4 (ii)–1 (iii)–2 (iv)–3
ஆ. (i)–3 (ii)–4 (iii)–1 (iv)–2
இ. (i)–4 (ii)–3 (iii)–2 (iv)–1
ஈ. (i)–2 (ii)–1 (iii)–4 (iv)–3

47. 'தேர்வண் பாரிதண் பறம்பு நாடே'
– இப்பாடலடியில் குறிப்பிடப்படும் 'பறம்பு மலை' அமைந்துள்ள மாவட்டம் .................

அ. தருமபுரி ஆ. ஏற்காடு இ. சிவகங்கை ஈ. திருவண்ணாமலை

48. "அறியேன்" என்ற சொல்லுக்குரிய சரியான பகுப்புமுறை ...............

அ. அறி(ய்) + ஏ + ன் ஆ. அறி + ய் + ஆ + ஏன்
இ. அறிய + ஏன் ஈ. அறி + ய் + ஏன்

49. கு.ப.ரா. ஆசிரியராகப் பணியாற்றாத இதழ் ..........

அ. பாரத மணி ஆ. பாரத தேவி இ. தமிழ்நாடு ஈ. கலைமகள்

50. "கறங்கு போல விற்பி டித்த கால தூதர் கையிலே
உறங்கு வாயு றங்கு வாயி னிக்கி டந்து றங்குவாய்"
– இவ்வடிகளில் இடம்பெறும் கறங்கு என்னும் சொல்லின் பொருள் ..........

அ. காற்றாடி ஆ. வில் இ. வாள் ஈ. கயிறு


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

51. சங்க காலத்தில் 'நற்சொல் கேட்டல்' என்னும் பொருளமைந்த சொல் ............

அ. விரிச்சி ஆ. தழிஞ்சி இ. கொடிச்சி ஈ. வெட்சி

52. பொருத்தி விடை தேர்க.

(i). அரும்பு – 1) பூ விரியத் தொடங்கும் நிலை
(ii). போது – 2) மரம், செடியினின்று பூ கீழே விழுந்த நிலை
(iii). வீ – 3) பூ வாடின நிலை
(iv). செம்மல் – 4) பூவின் தோற்றநிலை

அ. (i)–3 (ii)–4 (iii)–2 (iv)–1
ஆ. (i)–2 (ii)–4 (iii)–1 (iv)–3
இ. (i)–4 (ii)–1 (iii)–2 (iv)–3
ஈ. (i)–2 (ii)–3 (iii)–4 (iv)–1

53. 'மொகு சாஸ்ட்டு' என்னும் ஜப்பானிய மொழிச் சொற்றொடருக்கு இணையான தமிழ்மொழிச் சொற்றொடரைத் தேர்க.

அ. விடை தர வேண்டும் ஆ. விடை தர அவகாசம் வேண்டும்
இ. விடை தர மறுக்கிறேன் ஈ. விடை தர வேண்டிய அவசியமில்லை

54. "புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே" – இப்பாடலடிகள் உணர்த்தும் சரியான கூற்று.

அ. உறவினர் கெட வாழ்பவனின் பொலிவு அழியும்
ஆ. செல்வம் என்பது சிந்தையின் நிறைவு
இ. நிறைவடைகிறவனே செல்வன்
ஈ. உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பதுதான்

55. வேண்டிய, கூடிய, தக்க, வல்ல முதலான பெயரெச்சங்களைக் கூட்டுநிலைப் பெயரெச்சங்களாக உருவாக்கும் வினையெச்ச வாய்ப்பாடு .................

அ. செய்யிய ஆ. செய்பு இ. செய்வென் ஈ. செய

56. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடிஉண் டாயினும் இல் – இக்குறளில் காணும் நயங்களைத் தேர்க.

அ. எதுகை, இயைபு ஆ. மோனை, இயைபு
இ. இயைபு, முரண் ஈ. மோனை, எதுகை

57. "நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர்பொருப்பிற்
செந்தமிழின் பின்னுதித்த தென்றலே"
– என்று தென்றல் காற்றைப் பாடியவர் .........

அ. அழகிய மணவாளதாசர் ஆ. பலபட்டடைச் சொக்கநாதர்
இ. அழகிய சொக்கநாதர் ஈ. வெண்ணிக் குயத்தியார்

58. 'Paradox', 'Oxymoron' – ஆகிய சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தேர்க.

அ. முரண்படு மெய்ம்மை, சொல்முரண் ஆ. இணை ஒப்பு, எதிரிணை இசைவு
இ. உச்சநிலை, இணை ஒப்பு ஈ. எதிரிணை இசைவு, உச்சநிலை

59. மருதநிலக் கருப்பொருள் பட்டியலில் இடம்பெறாத பறவை ............

அ. நாரை ஆ. வாத்து இ. நீர்க் கோழி ஈ. அன்னம்

60. சரியான முறையில் அமைந்த தொடரைத் தெரிவு செய்க.

அ. தமிழரின் உண்ணாமை என்பது தனித்து விருந்தோம்பல் பண்பின் அடிப்படை
ஆ. விருந்தோம்பல் பண்பின் அடிப்படை தமிழரின் தனித்து உண்ணாமை என்பது
இ. தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை
ஈ. தமிழரின் விருந்தோம்பல் என்பது தனித்து உண்ணாமை பண்பின் அடிப்படை

61. 'ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே' – என்று பாடியவர் .................

அ. தாயுமானவர் ஆ. வள்ளலார் இ. பட்டினத்தார் ஈ. பத்திரகிரியார்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

62. 'தணிந்தது' – இப்பகுபதத்தில் இடம் பெற்றுள்ள சாரியையைத் தேர்க.
அ. து ஆ. த் இ. தணி ஈ. அ

63. கூற்று : 1 – ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் 'புகாகோ சுசுகி'.
கூற்று : 2 – இந்தியாவின் பாரத ஸ்டேட் வங்கி உருவாக்கிய உரையாடு மென்பொருள் 'இலா'.
– மேற்காண்பவற்றுள் சரியான/தவறான கூற்றைத் தேர்க.
அ. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
இ. கூற்று 1 மற்றும் 2 சரி ஈ. கூற்று 1 மற்றும் 2 தவறு

64. 'கூர்மபுராணம்' என்ற நூலை இயற்றியவர் .............
அ. செண்பகப் பாண்டியன் ஆ. வரகுணப் பாண்டியன்
இ. அதிவீரராம பாண்டியர் ஈ. சற்குணப் பாண்டியன்

65. வெண்பாவின் இலக்கணங்களுள் பொருந்தாதவற்றைத் தேர்க.
(i). செப்பலோசை பெற்று வரும்
(ii). ஈற்றடி முச்சீராக வரும்
(iii). ஏனைய அடிகள் அறுசீராக வரும்
(iv). விளச்சீர் மட்டுமே பயின்று வரும்
அ. (i) மற்றும் (ii) ஆ. (ii) மற்றும் (iii) இ. (iii) மற்றும் (iv) ஈ. (i) மற்றும் (iv)

66. பொருத்தி விடை தேர்க.
(i). தேடித்தேடி – 1) வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
(ii). அழுத குழந்தை – 2) வினைமுற்றுத் தொடர்
(iii). வளர்ந்தது தமிழ் – 3) பெயரெச்சத் தொடர்
(iv). ஊரின்கண் நீங்கினார் – 4) அடுக்குத் தொடர்

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | (i)–4 | (ii)–3 | (iii)–2 | (iv)–1 |
| ஆ. | (i)–3 | (ii)–4 | (iii)–1 | (iv)–2 |
| இ. | (i)–4 | (ii)–1 | (iii)–2 | (iv)–3 |
| ஈ. | (i)–4 | (ii)–2 | (iii)–1 | (iv)–3 |

67. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ...........
அ. திருக்குறள் ஆ. புறநானூறு இ. கம்பராமாயணம் ஈ. சிலப்பதிகாரம்

68. பொருந்தாத இணையைத் தேர்க.
அ. வயிரியம் – கூத்தர் ஆ. படுகர் – பாணர்
இ. அசைஇ – இளைப்பாறி ஈ. ஆரி – அருமை

69. குமரகுருபரர் குறித்த கூற்றுகளுள் தவறானதைத் தேர்க.
அ. கி.பி. 17–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.
ஆ. திருக்கை வழக்கம் என்பது இவர் எழுதிய நூல்களுள் ஒன்று.
இ. மதுரைக் கலம்பகம் உள்ளிட்ட சிற்றிலக்கியங்கள் பலவற்றைப் படைத்தவர்.
ஈ. இவர் தமிழ், வடமொழி, இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர்.

70. "அறப்பணி ஓய்வதில்லை
ஓய்ந்திடில் உலகமில்லை" இப்பாடலடிகள் இடம்பெற்ற நூல் தொகுப்பு .................
அ. மீட்சி விண்ணப்பம் ஆ. குயில் பாட்டு இ. கோடை வயல் ஈ. ஓர் இரவு

71. 'கன்றின் குரல் கேட்டது தாய்ப்பசு பாலினைத் தந்தது'
– இச்சொற்றொடரின் வகையைத் தேர்க.
அ. கலவைச் சொற்றொடர் ஆ. தொடர் சொற்றொடர்
இ. தனிச் சொற்றொடர் ஈ. எதிர்மறைச் சொற்றொடர்

72. வட இந்தியப் பெருங்கடலில் உருவான புயல்காற்றிற்கு தாய்லாந்து சூட்டிய பெயர் ............
அ. பெய்ட்டி ஆ. கஜா இ. பிஜ்லி ஈ. ஜல்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

73. சந்திப் பிழைகளற்ற தொடரைத் தேர்க.
அ. பருத்திச் செடிகளை அவள் மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்
ஆ. பருத்தி செடிகளை அவள் மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்
இ. பருத்தி செடிகளை அவள் மிகவும் கவனமாக பார்த்துக் கொண்டிருந்தாள்
ஈ. பருத்திச் செடிகளை அவள் மிகவும் கவனமாகப் பார்த்து கொண்டிருந்தாள்

74. பொருந்தாச் சொல்லைத் தேர்க.
அ. வாழ்க்கை ஆ. ஆளல் இ. நடத்தல் ஈ. பைங்கூழ்

75. இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் இயற்றிய நூல் .............
அ. பரிபாடல் ஆ. கூத்தராற்றுப்படை
இ. சிறுபாணாற்றுப்படை ஈ. முல்லைப்பாட்டு

76. இரண்டாம் இராசராசனது மெய்க்கீர்த்தியில் 'பிறழ்ந்தொழுகுவன்' என்று குறிப்படப்படுவது .................
அ. இளமான்கள் ஆ. வண்டுகள் இ. கயற்குலம் ஈ. மாமலர்கள்

77. பின்வருவனவற்றுள் சரியான வரிசையைக் காண்க.
அ. தால், காப்பு, செங்கீரை, சப்பாணி, வருகை, முத்தம், அம்புலி
ஆ. காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி
இ. காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, வருகை, முத்தம், அம்புலி
ஈ. காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, அம்புலி, முத்தம், வருகை

78. பொருத்தி விடை தேர்க.
(i). படாஅ – 1) சொல்லிசை அளபெடை
(ii). உரனசைஇ – 2) ஒற்றளபெடை
(iii). எடுப்பதூஉம் – 3) செய்யுளிசை அளபெடை
(iv). எஃஃகிலங்கிய – 4) இன்னிசை அளபெடை

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | (i)–3 | (ii)–2 | (iii)–4 | (iv)–1 |
| ஆ. | (i)–2 | (ii)–1 | (iii)–3 | (iv)–4 |
| இ. | (i)–3 | (ii)–1 | (iii)–4 | (iv)–2 |
| ஈ. | (i)–4 | (ii)–3 | (iii)–2 | (iv)–1 |

79. குடும்பம் வறுமையுற்ற நிலையிலும் உணவளிப்பதற்காக பணையம் வைத்த பொருளாக புறநானூறு குறிப்பிடுவது .............
அ. விளை நிலம் ஆ. குடியிருப்புகள்
இ. பழைய வாள் ஈ. பரிசுப் பொருட்கள்

80. 'சந்தாசாகிப்' மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக் கொண்டவர் ...........
அ. கால்டுவெல் ஆ. ஹிராஸ் பாதிரியார்
இ. கா.ப. செய்கு தம்பிப் பாவலர் ஈ. கான்சுடான்சு சோசப் பெசுகி

81. 'கொண்டல்' காற்றின் வேறு பெயரைத் தேர்க.
அ. ஊதைக் காற்று ஆ. மழைக் காற்று இ. வெப்பக் காற்று ஈ. நறுமணக் காற்று

82. சிலப்பதிகாரத்தில் சுருளிமலைக்கு வழங்கப்பட்ட பெயர் ..........
அ. திருமால்குன்றம் ஆ. திருப்பரங்குன்றம்
இ. சிறுமலை ஈ. நெடுவேள்குன்றம்

83. "வள்ளலின் பொருள் இரவலரின் பொருள்;
வள்ளலின் வறுமை இரவலரின் வறுமை;" – என்று கூறியவர் .................
அ. பெருஞ்சாத்தனார் ஆ. நக்கீரர் இ. பெரும்பதுமனார் ஈ. நல்வேட்டனார்

84. "மாசற விசித்த வார்புறு வள்பின்" – இவ்வரி இடம்பெற்றுள்ள நூல் ...........
அ. புறநானூறு ஆ. அகநானூறு இ. ஏலாதி ஈ. கார் நாற்பது


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

85. பொருத்தி விடை தேர்க.

(i). துடிப்பறை – 1) குறிஞ்சி
(ii). மணமுழா – 2) பாலை
(iii). தொண்டகம் – 3) முல்லை
(iv). ஏறுகோட்பறை – 4) மருதம்

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | (i)–2 | (ii)–4 | (iii)–1 | (iv)–3 |
| ஆ. | (i)–2 | (ii)–1 | (iii)–4 | (iv)–3 |
| இ. | (i)–4 | (ii)–3 | (iii)–2 | (iv)–1 |
| ஈ. | (i)–4 | (ii)–1 | (iii)–2 | (iv)–3 |

86. பின்வருவனவற்றில் சரியான கூற்றுகளைத் தேர்க.

(i). எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகும்.
(ii). வினைத்தொகையில் வல்லினம் மிகும்.
(iii). பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது.
(iv). விளித்தொடரில் வல்லினம் மிகாது.

அ. (i) மற்றும் (iv) ஆ. (iii) மற்றும் (iv) இ. (i) மற்றும் (iii) ஈ. (i) மற்றும் (ii)

87. 'பாடு இமிழ் பனிக்கடல்' – இதில் 'பாடு' என்பதன் பொருள் .............

அ. இசைக்கின்ற ஆ. உழைக்கின்ற இ. ஒலிக்கின்ற ஈ. கத்துகின்ற

88. "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்" – இப்பாடலின் ஆசிரியர் ..........

அ. மாணிக்க வாசகர் ஆ. சுந்தரர் இ. அப்பர் ஈ. திருஞானசம்பந்தர்

89. பெருஞ்சித்திரனாரின் நூல்களுள் தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த நூல் .............

அ. பாவியக் கொத்து ஆ. உலகியல் நூறு
இ. கனிச்சாறு ஈ. திருக்குறள் மெய்ப்பொருளுரை

90. "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி" – இக்குறட்பாவில் பயின்று வரும் தொடை நயம் ...........

அ. முரண்தொடை ஆ. அளபெடைத் தொடை
இ. இரட்டைத் தொடை ஈ. செந்தொடை

91. 'சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலை புனைந்தான்' – என்ற பாடலடிகள் இடம்பெற்ற நூல் ............

அ. மெய்க்கீர்த்தி ஆ. திருத்தணிகை உலா
இ. சிலப்பதிகாரம் ஈ. இராசராச சோழனுலா

92. 'மழையும் புயலும்' என்னும் நூலின் ஆசிரியர்............

அ. மு. வரதராசனார் ஆ. இரா.பி. சேது
இ. ப. ஜீவானந்தம் ஈ. வ. இராமசாமி

93. பின்வருவனவற்றுள் பொருந்தாத ஒன்றைத் தேர்க.

அ. ஓஒதல் ஆ. உறாஅர் இ. படாஅ ஈ. நசைஇ

94. "பரிமாறப்பட்ட கூடுதல் இட்லியில்
நீண்டு கொண்டிருந்தது
பிரியங்களின் நீள் சரடு" – என்னும் புதுக்கவிதைக்கு உரியவர் .............

அ. தபுசங்கர் ஆ. வைரமுத்து இ. அம்சப் பிரியா ஈ. உமா மகேஸ்வரி

95. 'விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போல' – எனப் பாடியவர் ............

அ. கம்பர் ஆ. ஜெயங்கொண்டார் இ. புகழேந்திப் புலவர் ஈ. ஔவையார்

96. "ஆக்கல் அளித்தல் அழித்தல் இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!" – இதில் அவனும் யானும் என்பது ..........

அ. மனிதனும் கடவுளும் ஆ. நண்பனும் கவிஞனும்
இ. தலைவனும் தலைவியும் ஈ. கடவுளும் கவிஞனும்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

97. பொருந்தாத இணைகளைத் தேர்க.

1. Ultraviolet rays – புற ஊதாக் கதிர்கள்
2. Cosmic rays – ஓசோன் கதிர்கள்
3. Revivalism – மீட்டுருவாக்கம்
4. Renaissance – புதிய நம்பிக்கை

அ. 1, 2 ஆ. 2, 4 இ. 3, 4 ஈ. 2, 3

98. "கறங்கு இசை விழவின் உறந்தை" என்று தற்போதைய திருச்சி மாவட்டத்தின் உறையூரைக் குறிப்பிடும் நூல் ..............

அ. அகநானூறு ஆ. புறநானூறு இ. சிலப்பதிகாரம் ஈ. நற்றிணை

99. சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்தும் செப்பேடு ................

அ. திருவாலங்காட்டுச் செப்பேடு ஆ. காசிச் செப்பேடு
இ. சின்னமனூர் செப்பேடு ஈ. வேள்விக்குடிச் செப்பேடு

100. திருத்தணிகையுலா கூறும் ஐம்பெருங்காப்பிய முறை வைப்பு .............

அ. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி
ஆ. சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி
இ. சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, சிலப்பதிகாரம், மணிமேகலை
ஈ. சீவக சிந்தாமணி,சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி

****************************************************


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# பள்ளிக் கல்வித்துறை, தூத்துக்குடி மாவட்டம்

## தமிழ் இலக்கியத் திறனறித் தேர்வு – 2024

### மாதிரித்தேர்வு – 2

### விடைகள்

| வினா | விடை | வினா | விடை | வினா | விடை | வினா | விடை | வினா | விடை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | இ | 21 | இ | 41 | அ | 61 | ஆ | 81 | ஆ |
| 2 | ஆ | 22 | அ | 42 | ஆ | 62 | ஈ | 82 | ஈ |
| 3 | இ | 23 | ஈ | 43 | ஆ | 63 | ஆ | 83 | இ |
| 4 | ஈ | 24 | இ | 44 | இ | 64 | இ | 84 | அ |
| 5 | அ | 25 | இ | 45 | ஈ | 65 | இ | 85 | அ |
| 6 | அ | 26 | ஆ | 46 | ஆ | 66 | அ | 86 | ஆ |
| 7 | ஈ | 27 | ஆ | 47 | இ | 67 | ஈ | 87 | இ |
| 8 | இ | 28 | இ | 48 | ஆ | 68 | ஆ | 88 | அ |
| 9 | ஆ | 29 | அ | 49 | ஈ | 69 | ஆ | 89 | ஈ |
| 10 | ஈ | 30 | ஈ | 50 | அ | 70 | இ | 90 | அ |
| 11 | ஆ | 31 | ஆ | 51 | அ | 71 | இ | 91 | ஆ |
| 12 | ஆ | 32 | ஆ | 52 | இ | 72 | அ | 92 | ஈ |
| 13 | அ | 33 | இ | 53 | ஆ | 73 | அ | 93 | ஈ |
| 14 | ஆ | 34 | அ | 54 | அ | 74 | ஈ | 94 | இ |
| 15 | அ | 35 | ஆ | 55 | ஈ | 75 | ஆ | 95 | ஆ |
| 16 | ஈ | 36 | இ | 56 | ஈ | 76 | இ | 96 | ஈ |
| 17 | ஆ | 37 | ஆ | 57 | ஆ | 77 | ஆ | 97 | ஆ |
| 18 | ஈ | 38 | இ | 58 | அ | 78 | இ | 98 | அ |
| 19 | அ | 39 | ஈ | 59 | ஆ | 79 | இ | 99 | இ |
| 20 | இ | 40 | ஈ | 60 | இ | 80 | ஈ | 100 | ஈ |